செ.வெ.எண்: 09 நாள்:05.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

தமிழக மக்கள் அனைவரும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகவும் மகிழ்ச்சியுடனும் கொண்டாட வழிவகை செய்யும் வகையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி குடும்ப அட்டை உடைய குடும்ப அட்டைதாரர்கள், காவலர் குடும்ப அட்டை பெற்றுள்ள காவலர் குடும்பங்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர் குடும்பங்கள் ஆகியோருக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீள கரும்பு துண்டுடன் 20 கிராம் முந்திரி, 20 கிராம் திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு எதிர்வரும் 2018-ம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வழங்க அரசு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொங்கல் பரிசு அடங்கிய தொகுப்பு அந்தந்த நியாய விலைக்கடைகளில் சுழற்சி முறையில் வழங்கப்பட உள்ளது. மேலும் எந்த பகுதிக்கு எந்த தேதியில் விநியோகம் செய்யப்படும் என்ற விபரம் அடங்கிய அறிவிப்பு நியாய விலைக்கடைகளில் ஒட்டப்பட்டிருக்கும். எனவே பொது மக்கள் எந்தவித சிரமமும் இன்றி பொங்கல் சிறப்பு தொகுப்பினை பெற்று பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.